## திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த
## நான்முகன் திருவந்தாதி

### நான்முகன் திருவந்தாதி தனியன்
### (ஸ்ரீராமப் பிள்ளை அருளிச் செய்தது)

நாராயணன் படைத்தான் நான்முகனை * நான்முகனுக்கு
ஏரார் சிவன் பிறந்தான் என்னும் சொல் * - சீரார்
மொழி செப்பி வாழலாம் நெஞ்சமே! * மொய்பூ
மழிசைப் பரன் அடியே வாழ்த்து

## திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த
## நான்முகன் திருவந்தாதி

2382 * நான்முகனை * நாராயணன் படைத்தான் * நான்முகனும்
தான் முகமாய்ச் * சங்கரனைத் தான் படைத்தான் ** - யான் முகமாய்
அந்தாதி மேலிட்டு * அறிவித்தேன் ஆழ்பொருளை *
சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து 1

2383 தேருங்கால் தேவன் * ஒருவனே என்று உரைப்பர் *
ஆரும் அறியார் அவன் பெருமை ** - ஓரும்
பொருள் முடிவும் இத்தனையே * எத்தவம் செய்தார்க்கும் *
அருள் முடிவது ஆழியான் பால் 2

2384 பாலில் கிடந்ததுவும் * பண்டரங்கம் மேயதுவும் *
ஆலில் துயின்றதுவும் ஆர் அறிவார்? ** - ஞாலத்து
ஒரு பொருளை * வானவர் தம் மெய்ப்பொருளை * அப்பில்
அருபொருளை யான் அறிந்தவாறு 3

2385 ஆறு சடைக் கரந்தான் * அண்டர் கோன் தன்னோடும் *
கூறுடையன் என்பதுவும் கொள்கைத்தே ** - வேறொருவர்
இல்லாமை * நின்றானை எம்மானை * எப்பொருட்கும்
சொல்லானைச் சொன்னேன் தொகுத்து 4

2386 தொகுத்த வரத்தனாய்த் * தோலாதான் மார்வம் *
வகிர்த்த வளையுகிர் தோள் மாலே! ** - உகத்தில்
ஒரு நான்று நீ உயர்த்தி * உள் வாங்கி நீயே[1] *
அருநான்கும் ஆனாய் அறி 5

[1] வாங்கினையே

2387 அறியார் சமணர் * அயர்த்தார் பவுத்தர் *
சிறியார் சிவப்பட்டார் செப்பில் ** - வெறியாய
மாயவனை மாலவனை * மாதவனை ஏத்தார் *
ஈனவரே ஆதலால் இன்று 6

2388 இன்றாக * நாளையே ஆக * இனிச் சிறிதும்
நின்றாக * நின் அருள் என் பாலதே ** - நன்றாக
நான் உன்னை * அன்றி இலேன் கண்டாய் * நாரணனே!
நீ என்னை அன்றி இலை 7

2389 இலை துணை மற்று என் நெஞ்சே! * ஈசனை வென்ற *
சிலை கொண்ட செங்கண் மால் சேரா ** - குலை கொண்ட
ஈரைந்தலையான் * இலங்கையை ஈடழித்த *
கூரம்பன் அல்லால் குறை 8

2390 குறை கொண்டு நான்முகன் * குண்டிகை நீர் பெய்து *
மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்தி ** - கறை கொண்ட
கண்டத்தான் * சென்னி மேல் ஏறக் கழுவினான் *
அண்டத்தான் சேவடியை ஆங்கு 9

2391 ஆங்காரவாரம் * அது கேட்டு * அழல் உமிழும்
பூங்கார் அரவணையான் பொன்மேனி ** - யாம் காண
வல்லமே அல்லமே? * மாமலரான் வார்சடையான் *
வல்லரே அல்லரே? வாழ்த்து 10

2392 வாழ்த்துக வாய் * காண்க கண் கேட்க செவி * மகுடம்
தாழ்த்தி * வணங்குமின்கள் தண்மலரால் ** - சூழ்த்த
துழாய் மன்னு நீள்முடி * என் தொல்லை மால் தன்னை *
வழா வண்கை கூப்பி மதித்து 11

2393 மதித்தாய்போய் நான்கின் * மதியார் போய் வீழ *
மதித்தாய் மதிகோள் விடுத்தாய் ** - மதித்தாய்
மடுக் கிடந்த * மாமுதலை கோள் விடுப்பான் * ஆழி
விடற்கிரண்டும் போய் இரண்டின் வீடு 12

2394 வீடாக்கும் * பெற்றி அறியாது * மெய் வருத்திக்
கூடாக்கி * நின்றுண்டு கொண்டுழல்வீர்! ** - வீடாக்கும்
மெய்ப்பொருள் தான் * வேத முதற்பொருள் தான் * விண்ணவர்க்கு
நற்பொருள் தான் நாராயணன் 13

2395 நாராயணன் என்னை ஆளி * நரகத்துச்
சேராமல் * காக்கும் திருமால் ** தன் - பேரான
பேசப் பெறாத * பிணச் சமயர் பேசக் கேட்டு *

ஆசைப்பட்டு ஆழ்வார் பலர் 14

2396 பல தேவர் ஏத்தப் * படி கடந்தான் பாதம் *
மலர் ஏற விட்டிறைஞ்சி வாழ்த்த - வலராகில் **
மார்க்கண்டன் கண்ட வகையே * வரும் கண்டீர் *
நீர்க்கண்டன் கண்ட நிலை 15

2397 நிலை மன்னும் என் நெஞ்சம் * அந்நான்று * தேவர்
தலை மன்னர் * தாமே மாற்றாக ** - பல மன்னர்
போர் மாள * வெங்கதிரோன் மாயப் பொழில் மறைய *
தேராழியால் மறைத்தாரால் 16

2398 ஆல நிழற்கீழ் * அற நெறியை * நால்வர்க்கு
மேலை உகத்துரைத்தான் * மெய்த்தவத்தோன் ** - ஞாலம்
அளந்தானை * ஆழிக் கிடந்தானை * ஆல் மேல்
வளர்ந்தானைத் தான் வணங்குமாறு 17

2399 மாறாய தானவனை * வள்ளுகிரால் * மார்விரண்டு
கூறாகக் * கீறிய கோள் அரியை ** - வேறாக
ஏத்தி இருப்பாரை * வெல்லுமே * மற்றவரைச்
சார்த்தி[2] இருப்பார் தவம் 18

2400 தவம் செய்து * நான்முகனால் பெற்ற வரத்தை *
அவம் செய்த ஆழியாய்[3] அன்றே ** - உவந்து எம்மைக்
காப்பாய் நீ * காப்பதனை ஆவாய் நீ * வைகுந்தம்
ஈப்பாயும் எவ்வுயிர்க்கும் நீ 19

2401 நீயே உலகெல்லாம் * நின் அருளே நிற்பனவும் *
நீயே தவத் தேவ தேவனும் ** - நீயே
எரி சுடரும் மால் வரையும் * எண்திசையும் * அண்டத்து
இருசுடரும் ஆய இவை 20

2402 இவையா! பிலவாய் * திறந்தெரி கான்ற *
இவையா! எரி வட்டக் கண்கள் ** - இவையா!
எரி பொங்கிக் காட்டும் * இமையோர் பெருமான் *
அரி பொங்கிக் காட்டும் அழகு 21

2403 அழகியான் தானே * அரியுருவன் தானே *
பழகியான் தாளே பணிமின் ** - குழவியாய்த்
தான் ஏழுலகுக்கும் * தன்மைக்கும் தன்மையனே *

[2] சாற்றி
[3] ஆழியான்

மீனாய் உயிரளிக்கும் வித்து 22

2404 வித்து மிட வேண்டுங்கொல்லோ? * விடை அடர்த்த *
பத்தி உழவன் பழம்புனத்து ** - மொய்த்தெழுந்த
கார்மேகம் அன்ன * கருமால் திருமேனி *
நீர் வானம் காட்டும் நிகழ்ந்து 23

2405 நிகழ்ந்தாய் * பால் பொன் பசுப்புக் * கார்வண்ணம் நான்கும்
இகழ்ந்தாய் * இருவரையும் வீயப் - புகழ்ந்தாய் **
சினப் போர்ச் சுவேதனைச் * சேனாபதியாய் *
மனப் போர் முடிக்கும் வகை 24

2406 வகையால் மதியாது * மண் கொண்டாய் * மற்றும்
வகையால் * வருவது ஒன்றுண்டே ** - வகையால்
வயிரம் குழைத்துண்ணும் * மாவலி தான் என்னும் *
வயிர வழக்கொழித்தாய் மற்று 25

2407 மற்றுத் தொழுவார் * ஒருவரையும் யான் இன்மை *
கற்றைச் சடையான் கரிக் கண்டாய் ** - எற்றைக்கும்
கண்டு கொள் கண்டாய் * கடல் வண்ணா! * யான் உன்னைக்
கண்டு கொள்கிற்குமாறு 26

2408 மால் தான் புகுந்த * மட நெஞ்சம்[4] * மற்றதுவும்
பேறாகக் * கொள்வனோ? பேதைகாள்! ** - நீறாடி
தான் காண மாட்டாத * தாரகலச் சேவடியை *
யான் காண வல்லேற்கு இது 27

2409 இது இலங்கை ஈடழியக் * கட்டிய சேது *
இது விலங்கு வாலியை வீழ்த்ததுவும்[5] ** - இது இலங்கை
தான் ஒடுங்க வில் நுடங்கத் * தண்தார் இராவணனை *
ஊன் ஒடுங்க எய்தான் உகப்பு 28

2410 உகப்புருவன் தானே * ஒளி உருவன் தானே *
மகப்புருவன் தானே மதிக்கில் ** - மிகப்புருவம்
ஒன்றுக்கு ஒன்று * ஓசனையான் வீழ * ஒரு கணையால்
அன்றிக்கொண்டு எய்தான் அவன் 29

2411 அவன் என்னை ஆளி * அரங்கத்து அரங்கில் *
அவன் என்னை எய்தாமல் காப்பான் ** - அவன் என்னது
உள்ளத்து * நின்றான் இருந்தான் கிடக்குமே *

---

[4] நெஞ்சன்
[5] வீழ்த்தது

வெள்ளத்தரவணையின் மேல் 30

2412 மேல் நான்முகன் * அரனை இட்ட விடு சாபம் *
தான் நாரணன் ஒழித்தான் தாரகையுள்[6] ** - வானோர்
பெருமானை * ஏத்தாத பேய்காள்! * பிறக்கும்
கருமாயம் பேசின் கதை 31

2413 கதைப் பொருள் தான் * கண்ணன் திருவயிற்றின் உள்ள *
உதைப்பளவு போது போக்கின்றி ** - வதைப் பொருள் தான்
வாய்ந்த குணத்துப் * படாதது அடைமினோ *
ஆய்ந்த குணத்தான் அடி 32

2414 அடிச் சகடம் சாடி * அரவாட்டி * யானை
பிடித்தொசித்துப் * பேய் முலை நஞ்சுண்டு ** - வடிப் பவள
வாய்ப் பின்னை தோளிக்கா * வல்லேற்று எருத்திறுத்து *
கோப்பின்னுமானான் குறிப்பு 33

2415 குறிப்பு எனக்குக் * கோட்டியூர் மேயானை ஏத்த *
குறிப்பு எனக்கு நன்மை பயக்க ** - வெறுப்பனோ?
வேங்கடத்து மேயானை * மெய்வினை[7] நோய் எய்தாமல் *
தான் கடத்தும் தன்மையான் தாள் 34

2416 * தாளால் உலகம் * அளந்த அசைவே கொல்? *
வாளா கிடந்தருளும் வாய்திறவான் ** - நீளோதம்
வந்தலைக்கும் மாமயிலை * மாவல்லிக்கேணியான் *
ஐந்தலைவாய் நாகத்தணை 35

2417 நாகத்தணைக் குடந்தை * வெஃகா திருவெவ்வுள் *
நாகத்தணை அரங்கம் பேரன்பில் ** - நாகத்
தணைப் பாற்கடல் கிடக்கும் * ஆதி நெடுமால் *
அணைப்பார் கருத்தனாவான் 36

2418 வானுலவு தீவளி * மாகடல் மாபொருப்பு *
தான் உலவு வெங்கதிரும் தண்மதியும் ** - மேல் நிலவு
கொண்டல் பெயரும் * திசை எட்டும் சூழ்ச்சியும் *
அண்டந்திருமாலகைப்பு 37

2419 அகைப்பில் மனிசரை * ஆறு சமயம்
புகைத்தான் * பொருகடல் நீர் வண்ணன் ** - உகைக்கு மேல்
எத்தேவர் வாலாட்டும் * எவ்வாறு செய்கையும் *

---

[6] தாரணியுள்

[7] வெவ்வினை

அப்போதொழியும் அழைப்பு 38

2420 அழைப்பன் * திருவேங்கடத்தானைக் காண *
இழைப்பன் * திருக்கூடல் கூட ** - மழைப்பேர்
அருவி * மணி வரன்றி[8] வந்திழிய * யானை
வெருவி அரவொடுங்கும் வெற்பு 39

2421 வெற்பென்று * வேங்கடம் பாடினேன் * வீடாக்கி
நிற்கின்றேன் * நின்று நினைக்கின்றேன் ** - கற்கின்ற
நூல் வலையில் பட்டிருந்த * நூலாட்டி கேள்வனார் *
கால் வலையில் பட்டிருந்தேன் காண் 40

2422 காணலுறுகின்றேன் * கல்லருவி முத்துதிர *
ஓண விழவில் ஒலி அதிர ** - பேணி
வருவேங்கடவா! * என் உள்ளம் புகுந்தாய் *
திருவேங்கடம் அதனைச் சென்று 41

2423 சென்று வணங்குமினோ * சேணுயர் வேங்கடத்தை *
நின்று வினை கெடுக்கும் நீர்மையால் ** - என்றும்
கடிக்கமல நான்முகனும் * கண் மூன்றத்தானும் *
அடிக்கமலம் இட்டு ஏத்தும் அங்கு 42

2424 மங்குல் தோய் சென்னி * வடவேங்கடத்தானை *
கங்குல் புகுந்தார்கள் * காப்பணிவான் ** - திங்கள்
சடையேற வைத்தானும் * தாமரை மேலானும் *
குடையேறத் தாம் குவித்துக் கொண்டு 43

2425 கொண்டு குடங்கால் * மேல் வைத்த குழவியாய் *
தண்ட அரக்கன் தலை தாளால் - பண்டெண்ணி **
போம் குமரன் நிற்கும் * பொழில் வேங்கட மலைக்கே *
போம் குமரருள்ளீர்! புரிந்து 44

2426 புரிந்து மலர் இட்டுப் * புண்டரீகப் பாதம் *
பரிந்து படுகாடு நிற்ப ** - தெரிந்தெங்கும்
தான் ஓங்கி நிற்கின்றான் * தண்ணருவி வேங்கடமே *
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு 45

2427 வைப்பன் மணி விளக்கா * மாமதியை * மாலுக்கென்று
எப்பொழுதும் * கை நீட்டும் யானையை ** - எப்பாடும்
வேடு வளைக்கக் * குறவர் வில் எடுக்கும் வேங்கடமே *
நாடு வளைத்தாடுது[9] மேல் நன்று 46

[8] வரண்டி

2428 நன்மணி வண்ணனூர் * ஆளியும் கோளரியும் *
பொன்மணியும் முத்தமும் பூமரமும் ** - பன்மணி நீ
ரோடு பொருதுருளும் * கானமும் வானரமும் *
வேடுமுடை வேங்கடம் 47

2429 வேங்கடமே * விண்ணோர் தொழுவதுவும் * மெய்ம்மையால்
வேங்கடமே * மெய்வினை நோய் தீர்ப்பதுவும் ** - வேங்கடமே
தானவரை வீழத் * தன் ஆழிப் படை தொட்டு *
வானவரைக் காப்பான் மலை 48

2430 மலையாமை மேல் வைத்து * வாசுகியைச் சுற்றி *
தலையாமை தான் ஒரு கை பற்றி ** - அலையாமல்
பீறக் கடைந்த * பெருமான் திருநாமம் *
கூறுவதே யாவர்க்கும் கூற்று 49

2431 கூற்றமும் சாரா * கொடுவினையும் சாரா * தீ
மாற்றமும் சாரா வகை அறிந்தேன் ** - ஆற்றங்
கரைக் கிடக்கும் * கண்ணன் கடல் கிடக்கும் * மாயன்
உரைக் கிடக்கும் உள்ளத்து எனக்கு 50

2432 எனக்காவார் ஆர் ஒருவரே? * எம்பெருமான்
தனக்காவான் * தானே மற்றல்லால் ** - புனக்காயா
வண்ணனே! * உன்னைப் பிறர் அறியார் * என் மதிக்கு
விண் எல்லாம் உண்டோ விலை? 51

2433 விலைக்கு ஆட்படுவர் * விசாதி ஏற்றுண்பர் *
தலைக்காட்பலி திரிவர் தக்கோர் ** - முலைக் கால்
விடம் உண்ட வேந்தனையே * வேறா ஏத்தாதார் *
கடமுண்டார்[10] கல்லாதவர் 52

2434 கல்லாதவர் இலங்கை கட்டழித்த * காகுத்தன்
அல்லால் * ஒரு தெய்வம் யானிலேன் ** - பொல்லாத
தேவரைத் * தேவர் அல்லாரை * திருவில்லாத்
தேவரைத் தேறேல்மின் தேவு 53

2435 தேவராய் * நிற்கும் அத்தேவும் * அத்தேவரில்
மூவராய் நிற்கும் * முது புணர்ப்பும் ** - யாவராய்
நிற்கின்றதெல்லாம் * நெடுமால் என்று ஓராதார் *
கற்கின்றதெல்லாம் கடை 54

---

[9] வளைத்தாடு
[10] கடனுண்டார்

2436 கடை நின்றமரர் கழல் தொழுது * நாளும்
இடை நின்ற * இன்பத்தராவர் ** - புடை நின்ற
நீரோத மேனி * நெடுமாலே! * நின் அடியை
யார் ஓத வல்லார் அவர்? 55

2437 அவர் இவர் என்றில்லை * அனங்க வேள் தாதைக்கு *
எவரும் எதிர் இல்லை கண்டீர் ** - உவரிக்
கடல் நஞ்சமுண்டான் கடன் என்று * வாணற்கு
உடன் நின்று தோற்றான் ஒருங்கு 56

2438 ஒருங்கிருந்த நல்வினையும் * தீவினையும் ஆவான் *
பெருங்குருந்தம் சாய்த்தவனே பேசில் ** - மருங்கிருந்த
வானவர் தாம் தானவர் தாம் * தாரகை தான் * என்னெஞ்சம்
ஆனவர் தாம் அல்லாததென்? 57

2439 என்னெஞ்ச மேயான் * இருள் நீக்கி எம்பிரான் *
மன்னஞ்ச முன்னொரு நாள் மண் அளந்தான் ** - என்னெஞ்ச
மேயானை * இல்லா விடை ஏற்றான் * வெவ்வினை தீர்த்து
ஆயனுக்கு ஆக்கினேன் அன்பு 58

2440 அன்பாவாய் * ஆரமுதம் ஆவாய் * அடியேனுக்கு
இன்பாவாய் * எல்லாமும் நீயாவாய் ** - பொன்பாவை
கேள்வா! * கிளரொளி என் கேசவனே! * கேடின்றி
ஆள்வாய்க்கு அடியேன் நானாள் 59

2441 ஆட்பார்த்து உழி தருவாய் * கண்டு கொள் என்றும் * நின்
தாட்பார்த்து உழி தருவேன் தன்மையை ** - கேட்பார்க்கு
அரும்பொருளாய் * நின்ற அரங்கனே! * உன்னை
விரும்புவதே விள்ளேன் மனம் 60

2442 மனக்கேதம் சாரா * மதுசூதன் தன்னை *
தனக்கே தான் தஞ்சமாக் கொள்ளில் **- எனக்கே தான்
இன்றொன்றி நின்று உலகை * ஏழ் ஆணை ஓட்டினான் *
சென்றொன்றி நின்ற திரு 61

2443 திரு நின்ற பக்கம் * திறவிதென்று ஓரார் *
கரு நின்ற கல்லார்க்கு உரைப்பர் ** - திருவிருந்த
மார்வன்[11] * சிரீதரன் தன் வண்டுலவு தண் துழாய் *
தார் தன்னைச் சூடித் தரித்து 62

2444 தரித்திருந்தேனாகவே * தாரா கணப் போர் *

[11] மார்பின்

விரித்துரைத்த வெந்நாகத்துன்னை ** - தெரித்தெழுதி
வாசித்தும் கேட்டும் * வணங்கி வழிபட்டும் *
பூசித்தும் போக்கினேன் போது 63

2445 போதான * இட்டிறைஞ்சி ஏத்துமினோ * பொன் மகரக்
காதானை * ஆதிப்பெருமானை ** - நாதானை
நல்லானை நாரணனை * நம் ஏழ் பிறப்பு அறுக்கும்
சொல்லானை * சொல்லுவதே சூது 64

2446 சூதாவது என் நெஞ்சத்து எண்ணினேன் * சொல் மாலை
மாதாய * மாயவனை[12] மாதவனை ** - யாதானும்
வல்லவா * சிந்தித்திருப்பேற்கு * வைகுந்தத்து
இல்லையோ சொல்லீர் இடம்? 65

2447 இடமாவது * என் நெஞ்சம் இன்றெல்லாம் * பண்டு
பட நாகணை * நெடிய மாற்கு ** - திடமாக
வையேன் * மதி சூடி தன்னோடு * அயனை நான்
வையேன் ஆட்செய்யேன் வலம் 66

2448 வலமாக * மாட்டாமை தானாக * வைகல்
குலமாக * குற்றம் தானாக ** - நலமாக
நாரணனை நாபதியை[13] * ஞானப் பெருமானை *
சீரணனை ஏத்தும் திறம் 67

2449 திறம்பேன்மின் கண்டீர் * திருவடி தன் நாமம் *
மறந்தும் புறந்தொழா மாந்தர் ** - இறைஞ்சியும்
சாதுவராய்ப் * போதுமின்கள் என்றான் * நமனும் தன்
தூதுவரைக் கூவிச் செவிக்கு 68

2450 செவிக்கு இன்பம் ஆவதுவும் * செங்கண்மால் நாமம் *
புவிக்கும் புவி அதுவே கண்டீர் ** - கவிக்கு
நிறை பொருளாய்[14] * நின்றானை நேர்பட்டேன் * பார்க்கில்
மறைப் பொருளும் அத்தனையே தான் 69

2451 தான் ஒருவனாகித் * தரணி இடந்து எடுத்து *
ஏனொருவனாய் எயிற்றில் தாங்கியதும் ** - யான் ஒருவன் *
இன்றா அறிகின்றேன் அல்லேன் * இருநிலத்தைச்
சென்றாங்கடிப்படுத்த சேய் 70

[12] மாலவனை
[13] நம்பதியை
[14] நிறைப் பொருளாய்

2452 சேயன் அணியன் * சிறியன் மிகப் பெரியன் *
ஆயன் துவரைக் கோனாய் நின்ற - மாயன் ** அன்று
ஓதிய * வாக்கதனைக் கல்லார் * உலகத்தில்
ஏதிலராம் மெய்ஞ்ஞானமில் 71

2453 இல்லறம் இல்லேல்[15] * துறவறம் இல்லென்னும் *
சொல்லறம் அல்லனவும் சொல்லல்ல ** - நல்லறம்
ஆவனவும் * நால்வேத மாத்தவமும் * நாரணனே
ஆவது ஈதன்று என்பாரார்? 72

2454 ஆரே அறிவார்? * அனைத்துலகும் உண்டு உமிழ்ந்த *
பேராழியான் தன் பெருமையை ** - கார் செறிந்த
கண்டத்தான் * எண்கண்ணான் காணான் * அவன் வைத்த
பண்டைத் தானத்தின் பதி 73

2455 பதிப் பகைஞற்கு[16] ஆற்றாது * பாய் திரை நீர்ப் பாழி *
மதித்தடைந்த வாளரவந்தன்னை ** - மதித்தவன் தன்
வல்லாகத் தேற்றிய * மாமேனி மாயவனை *
அல்லது ஒன்று ஏத்தாது என் நா 74

2456 நாக்கொண்டு * மானிடம் பாடேன் * நலமாகத்
தீக்கொண்ட * செஞ்சடையான் சென்று ** என்றும் - பூக்கொண்டு
வல்லவாறு * ஏத்த மகிழாத * வைகுந்தச்
செல்வனார் சேவடி மேல் பாட்டு 75

2457 பாட்டும் முறையும் * படுகதையும் பல்பொருளும் *
ஈட்டிய தீயும் இருவிசும்பும் ** - கேட்ட
மனுவும் * சுருதி மறை நான்கும் * மாயன்
தன மாயையில் பட்டதற்பு 76

2458 தற்பென்னைத் * தான் அறியானேலும் * தடங்கடலைக்
கற்கொண்டு தூர்த்த கடல் வண்ணன் ** - எற்கொண்ட
வெவ்வினையும் நீங்க * விலங்கா மனம் வைத்தான் *
எவ்வினையும் மாயுமால் கண்டு 77

2459 கண்டு வணங்கினார்க்கு * என்னாங்கொல்? * காமன் உடல்
கொண்ட * தவத்தாற்கு உமை உணர்த்த ** - வண்டலம்பும்
தாரலங்கல் நீள்முடியான் * தன் பெயரே கேட்டிருந்து * அங்
காரலங்கல் ஆனமையால் ஆய்ந்து 78

---

[15] அல்லேல்
[16] பகைஞர்க்கு

2460 ஆய்ந்து கொண்டு * ஆதிப் பெருமானை * அன்பினால்
வாய்ந்த * மனத்து இருத்த வல்லார்கள் ** - ஏய்ந்த தம்
மெய்குந்தமாக * விரும்புவரே * தாமும் தம்
வைகுந்தம் காண்பார் விரைந்து 79

2461 விரைந்து அடைமின் மேலொரு நாள் * வெள்ளம் பரக்க *
கரந்துலகம் காத்தளித்த கண்ணன் ** - பரந்துலகம் *
பாடின ஆடின கேட்டு * படு நரகம்
வீடின வாசற்கதவு 80

2462 கதவு மனம் என்றும் * காணலாம் என்றும் *
குதையும் வினை ஆவி தீர்ந்தேன் ** - விதையாக
நல்தமிழை வித்தி * என் உள்ளத்தை நீ விளைத்தாய் *
கற்ற மொழியாகிக் கலந்து 81

2463 கலந்தான் என் உள்ளத்துக் * காமவேள் தாதை *
நலந்தானும் ஈதொப்பதுண்டே? ** - அலர்ந்தலர்கள்
இட்டேத்தும் * ஈசனும் நான்முகனும் * என்றிவர்கள்
விட்டேத்த மாட்டாத வேந்து 82

2464 வேந்தராய் விண்ணவராய் * விண்ணாகித் தண்ணளியாய் *
மாந்தராய் மாதாய் மற்றெல்லாமாய் ** - சார்ந்தவர்க்குத்
தன்னால் தான் நேமியான் * மால்வண்ணன் தான் கொடுக்கும் *
பின்னால் தான் செய்யும் பிதிர் 83

2465 பிதிரும் மனமிலேன் * பிஞ்ஞகன் தன்னோடு
எதிர்வன் * அவன் எனக்கு நேரான் ** - அதிரும்
கழற்கால மன்னனையே * கண்ணனையே * நாளும்
தொழக்[17] காதல் பூண்டேன் தொழில் 84

2466 தொழில் எனக்குத் * தொல்லை மால் தன் நாமம் ஏத்த *
பொழுது எனக்கு மற்றதுவே போதும் ** - கழிசினத்த
வல்லாளன் * வானரக்[18] கோன் வாலி மதனழித்த *
வில்லாளன் நெஞ்சத்துளன் 85

2467 உளன் கண்டாய் நன்னெஞ்சே! * உத்தமனென்றும்
உளன் கண்டாய் * உள்ளுவார் உள்ளத்து - உளன் கண்டாய் **
தன்னொப்பான் தானாய் * உளன் காண் தமியேற்கு[19] *
என்னொப்பார்க்கு ஈசனிமை 86

---

[17] தொழும்
[18] வானரர்
[19] தமியேற்கும்

2468 இமையப் பெருமலை போல் * இந்திரனார்க்கு இட்ட *
சமய விருந்துண்டு ஆர் காப்பார்? ** - சமயங்கள்
கண்டான் அவை காப்பான் * கார்க்கண்டன் நான்முகனோடு *
உண்டான் உலகோடு உயிர் 87

2469 உயிர் கொண்டு உடல் ஒழிய * ஓடும் போதோடி *
அயர்வென்ற தீர்ப்பான் பேர் பாடி ** - செயல் தீரச்
சிந்தித்து * வாழ்வாரே வாழ்வார் * சிறு சமயப்
பந்தனையார் வாழ்வேல் பழுது 88

2470 பழுதாகாது ஒன்றறிந்தேன் * பாற்கடலான் பாதம் *
வழுவா வகை நினைந்து வைகல் - தொழுவாரை **
கண்டிறைஞ்சி வாழ்வார் * கலந்த வினை கெடுத்து *
விண் திறந்து வீற்றிருப்பார் மிக்கு 89

2471 வீற்றிருந்து * விண்ணாள வேண்டுவார் * வேங்கடத்தான்
பால்திருந்த வைத்தாரே பல்மலர்கள் ** - மேல் திருந்த
வாழ்வார் * வருமதி பார்த்து அன்பினராய் * மற்றவர்க்கே
தாழ்வாய் இருப்பார் தமர் 90

2472 தமர் ஆவர் யாவர்க்கும் * தாமரை மேலார்க்கும் *
அமரர்க்கும் ஆடரவத்தார்க்கும்[20] ** - அமரர்கள்
தாள் தாமரை * மலர்கள் இட்டு இறைஞ்சி * மால் வண்ணன்
தாள் தாமரை அடைவோம் என்று 91

2473 என்றும் மறந்தறியேன் * என் நெஞ்சத்தே வைத்து *
நின்றும் இருந்தும் நெடுமாலை ** - என்றும்
திருவிருந்த மார்பன் * சிரீதரனுக்கு ஆளாய் *
கருவிருந்த நாள் முதலாக் காப்பு 92

2474 காப்பு மறந்தறியேன் * கண்ணனே என்றிருப்பன் *
ஆப்பு அங்கொழியவும் பல்லுயிர்க்கும் ** - ஆக்கை
கொடுத்தளித்த * கோனே! குணப் பரனே! * உன்னை
விடத் துணியார் மெய் தெளிந்தார் தாம் 93

2475 மெய் தெளிந்தார் என் செய்யார்? * வேறானார் நீறாக *
கை தெளிந்து காட்டிக் களப்படுத்து ** - பை தெளிந்த
பாம்பின் அணையாய்! * அருளாய் அடியேற்கு *
வேம்பும் கறியாகுமேன்று 94

2476 * ஏன்றேன் அடிமை * இழிந்தேன் பிறப்பு இடும்பை *

---

[20] ஆடரவார்த்தாற்கும்

ஆன்றேன் அமரர்க்கு அமராமை ** - ஆன்றேன்
கடன் நாடும் மண்ணாடும் * கைவிட்டு * மேலை
இட நாடு காண இனி 95

2477 * இனி அறிந்தேன் * ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம் *
இனி அறிந்தேன் எம்பெருமான்! உன்னை ** - இனி அறிந்தேன்
காரணன் நீ கற்றவை நீ * கற்பவை நீ * நற்கிரிசை
நாரணன் நீ நன்கறிந்தேன் நான் 96

**தசக அடிவரவு:** நான்முகன் வாழ்த்துக இவை மேல் காணல் எனக்கு
மனக்கேதம் சேயன் கதவு தமராவார் பொய்ந்நின்ற

**திருமழிசை ஆழ்வார் திருவடிகளே சரணம்**